கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 355 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 20 – புதன்கிழமை 05 ஆகஸ்ட் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 355 : Thiruvalluvar Year - 2057 - Aadi 20 - Wednesday 05 August 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## நீதிபதி அறிவுறுத்தலையும் மீறி – கையாலாகாத ‘டம்மி’ முதல்வர் விஜய் ஆட்சியில்

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திடீர் கைது!

## அரசின் அராஜகத்தைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கொந்தளிப்பு – கழகத்தினர் கைது!



சென்னை, ஆக. 5 -

**தஞ்சை கண்டன ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அவதூறாக பேசியதாக குற்றம் சாட்டி கையாலாகாத ‘டம்மி’ முதலமைச்சர் விஜய் ஆட்சியில் நீதிபதி அறிவுறுத்தலையும் மீறி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார். அரசின் அராஜகப் போக்கை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் கொந்தளித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கைதாகியுள்ளனர்.**

சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் த.வெ.க. ஆட்சியில் விவசாயிகள் பாதிப்பு மற்றும் காவிரியில் தண்ணீர் திறந்து விடாததைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அவதூறாக பேசாத ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள் பேசினார் என்று த.வெ.க. அரசின் டம்மி முதலமைச்சர் விஜய், கற்பனை செய்து கொண்டு, உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்யும் முடிவால், நேற்று காலை முதல் நீலாங்கரையில் உள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இல்லத்தில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்களை போலீசாரால் கைது செய்யப்படுவார் என்ற செய்தி பரவியதும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அப்போது 12 மணி வரை அவரை போலீசார் கைது செய்யக்கூடாது என்று நீதிபதி உத்தரவிட்டார்.

### நீதிபதி உத்தரவையும் மீறிய விஜய்

நீதிபதி உத்தரவினையும் மீறி போலீசார் நீலாங்கரையில் ஆயிரக்கணக்கில் குவிந்த வண்ணமிருந்தனர்.

உடனே பல்லாயிரம் கழகத்தினர் குவிய குவிய அங்கே பதற்றமான சூழ்நிலை உருவானது. இந்நிலையில் நீதிமன்ற உத்தரவினையும் மீறி காவல்துறை ஆணையர் அமல்ராஜ் தலைமையில் நீலாங்கரை காவல்துறை துணை ஆணையர் விஜயகுமார் மற்றும் போலீசார், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை காலை 11 மணியளவில் கைது செய்தனர். அப்போது மாவட்டக் கழகச் செயலாளர்கள் – முன்னாள் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு உடனிருந்தனர்.

### கழகத்தினர் முழக்கம்

உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ததைக் கண்டித்து கழகத்தினர் சாலையில் அமர்ந்தும், படுத்தும் விஜய் அரசுக்கு கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதேபோன்று தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே சாலை மறியல் மற்றும் கண்டன முழக்கங்களை கழகத்தினர் எழுப்பி தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஒரு அசாதாரணமான சூழ்நிலை உருவாகியுள்ளது. கைது செய்யப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூருக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.

கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் காவல்துறையினரால் தஞ்சாவூர் அழைத்துச் செல்லப்படுகிறார். போலீசார் வாகனத்திலேயே உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அழைத்து செல்லப்பட்டுள்ளார். அவரை பின் தொடர்ந்து தி.மு.க.வினர் பயணித்து வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திமுகவினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டபின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

காவிரியில் நான் பேசாததை பேசியதாக கூறி கைது செய்துள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையை காமெடியாகப் பார்க்கிறேன். இப்படிப்பட்ட கைது நடவடிக்கைகளை யெல்லாம் கண்டு அஞ்சமாட்டேன். சட்டப் பேரவை கூட்டத்தில் பங்கேற்கக் கூடாதென்பதற்காகவே கைது செய்திருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்களை பொய் வழக்கில் கைது செய்கின்றனர். எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குகின்றனர். முதலமைச்சர் முதல், அமைச்சர்கள் வரை ரீல்ஸ்தான் இந்த ஆட்சியில் நடக்கிறது. காவிரிப் பிரச்சினையை மடைமாற்றம் செய்யவே இந்த கைது நடவடிக்கை நடந்துள்ளது. எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாத பயந்தாங்கொள்ளி அரசாக இந்த அரசு உள்ளது. இந்த வழக்கை முறைப்படி சந்திப்போம்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

### அஞ்ச மாட்டேன்!

**காவிரியில் நான் பேசாததை பேசியதாக கூறி கைது செய்துள்ளனர்.**

**இந்த கைது நடவடிக்கையை காமெடியாகப் பார்க்கிறேன். இப்படிப்பட்ட கைது நடவடிக்கைகளை யெல்லாம் கண்டு அஞ்சமாட்டேன். சட்டப் பேரவை கூட்டத்தில் பங்கேற்கக் கூடாதென்பதற்காகவே கைது செய்திருக்கிறார்கள்.**